End time Warriors

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS

Battle 01 - Field 02 - June 2020



# ஆளுகை

## முதல் வரிகள்......

இந்த கடிதம் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் நின்று கொண்டிருப்பது கடைசி காலம் என்பதை சபைகள் அறிவித்த நாட்கள் மாறி, தேசத்தில் இன்று நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும், வேதத்தில் எழுதப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. தேசத்தில் நடைபெறும் சம்பவங்களை பார்க்கும் போது, பூமி தன்னுடைய கடைசி ஓட்டத்தை துவங்க ஆரம்பித்துவிட்டது, என்ற எண்ணம் தோன்றுகிறது. இன்று நாம் காணும் இந்த சம்பவங்கள், இயேசுவை அறியாதவர்களுக்கு, ஏதோ ஒரு புதுமையான காரியங்களாக தெரியலாம். ஆனால், இவைகள் எல்லாம் நம் வேதம் முன் அறிவித்தவை. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டும் என்றால், தேசத்தில் நடைபெறும் காரியங்களால் மனிதர்களுடைய இருதயம் கரைந்து போய் இருக்கிறது, அடுத்து என்ன சம்பவிக்குமோ என்று.....

ஆனால், உலகம் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான காலங்களில் சென்று கொண்டிருந்தாலும், இயேசுவை தங்களுடைய வாழ்க்கையில் தரித்திருக்கிற வாலிபர்களுக்கு இது ஒரு முக்கியமான காலம். ஆம், நீ கர்த்தருக்காக, ஒரு யுத்த சேனையாய் எழும்ப வேண்டிய காலம். வேதத்தில் காணும் அநேக பரிசுத்தவான்கள், அவர்களுடைய காலங்களில் தங்களுடைய ஓட்டத்தை நேர்த்தியாய் முடித்து வேதத்தில் இடம் பெற்றது போல. இது உன்னுடைய ஓட்டம் துவங்குகிற காலமாயிருக்கிறது. உன் ஓட்டத்தை தடைசெய்கிற பாவங்களை உதறுகிற நேரம் இது. எபேசியர்.*5:16*, சொல்லுகிறது, "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்".

எனக்கு பிரியமான அன்பு தம்பி, தங்கச்சி, இது நீ பிரயோஜன படுத்த வேண்டிய காலம். நீ யார் என்பதை உணர வேண்டிய நேரம், உன்னைக் குறித்த அழைப்பு என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டிய நேரம். நாம் எழும்புமளவும், நம் தேசம், நம் இரட்சகரை அறிந்து கொள்வது கடினம். வாலிப சேனையே எழும்பு, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.

யுத்த களத்தில் உங்களோடு,
*R.*சாலமோன்

# ஆளுகை

கர்த்தர் விரும்புகிறதும், எதிர்ப்பார்த்து கொண்டிருக்கிறதுமான யுத்த தலைமுறையே, ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். ஒரு இயந்திரம் இயங்க வேண்டுமானால், அதை இயக்குகிறவர்கள் உடனிருக்க வேண்டும். ஒரு தேசம் இயங்க வேண்டுமானால் அதை ஆளுகிறவர்கள் இருக்க வேண்டும். அதே போல தான், இயேசுவின் இரத்ததினால் கழுவப்பட்ட ஒரு வாலிபன், கரை படிந்த இந்த உலகத்திலே, பரிசுத்தமாய் வாழ, தேவனால் ஆளுகை செய்யப்பட வேண்டும். வேதம் சொல்லுகிறது, ரோமர்.*8:14*,ல் "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்". பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்று உங்களுடைய உள்ளம், எந்த அளவு வாஞ்சிக்கிறதோ, அதை விட அதிகமாய், தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுவதற்கு, நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும், விரும்பவும் வேண்டும். நம்மை ஆளுகை செய்கிறவர், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்றால், இந்த உலகத்தில் எப்படிப்பட்ட ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ முடியும் சிந்தித்து பாருங்கள். யுத்த காலங்களில், போர் வீரர்கள் தாங்கள் வைத்திருக்கும் தொடர்பு கருவிகளை அணைத்து வைக்க அனுமதியில்லை. ஏனென்றால், இராணுவ தலைமையிடத்திலிருந்து அவ்வப்போது, போர் வீரர்களுக்கு தகவல் வந்துகொண்டே இருக்கும். அவர்கள் செல்ல வேண்டிய பாதைகள், செய்ய வேண்டிய காரியங்கள், முடிக்க வேண்டிய இலக்குகள் என்ன என்பதை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இதை வாசிக்கிற அன்பு வாலிப தம்பி, தங்கச்சி உன்னையும் கூட தேவன் இவ்வாறு நடத்த விரும்புகிறார். உன்னை ஆளுகை செய்ய விரும்புகிறார். கடைசி நாட்களில் பயணிக்கிற உன்னை இந்நாட்களின் பயங்கரத்துக்கும், பிசாசின் திட்டங்களுக்கும் விலக்கி, அவனுடைய தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க திராணி உள்ளவர்களாக உங்களை மாற்ற விரும்புகிறார். அதற்கு நீ அவரால் ஆளுகை செய்யப்பட வேண்டியது அவசியம். ஆனால் அநேக நேரங்களில், அவருடைய ஆளுகையை நாம் விரும்புகிறது இல்லை, தவிர்த்தும் விடுகிறோம். ஏனென்றால், அவர் உங்கள் ஆளுகை செய்யும் போது, நீங்கள் விரும்புகிற எல்லாவற்றையும் செய்ய முடியாது, உன் இதயம் விரும்புகிற உறவுகளை தொடர முடியாது, உன் கண் இச்சிக்கிற வீடியோக்களை பார்க்க முடியாது. *1* சாமுவேல் *8:5*,ல் சொல்லப்படுகிறது, இஸ்ரவேல் ஜனங்களும் தங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்த தேவனை மறந்து, அவருடைய ஆளுகையைத் தள்ளினார்கள். தேவன் தங்களை ஆளுவதை விட மனிதனால் ஆளப்படுவதை விரும்பினார்கள். *1* சாமுவேல் *8:7* சொல்லுகிறது, "நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்." இன்று நாமும் கூட இதே தவறை தான் செய்கிறோம். தேவனுடைய ஆளுகையைத் தள்ளி இந்த உலகம் நம்மை ஆளுகை செய்ய ஒப்புக்கொடுக்கிறோம். இன்றைக்கும் நம்மில் அநேகரை அவர்களுடைய மொபைல் ஆளுகை செய்து கொண்டிருக்கிறது. தேவன் விரும்பாத உறவுகளில் தொடர, அவர்களுடைய இருதயம் அவர்களை ஆளுகை செய்கிறது. சிலரை, சில *online video games* ஆளுகை செய்கிறது. இதை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, உன்னை எது ஆளுகை செய்து கொண்டிருக்கிறது என்பதை நீயே சிந்தித்து கொள். இந்த உலகத்தினால் ஆளுகை செய்யப்பட விரும்புகிறாயா, அல்லது உன்னை படைத்தவர் உன்னை ஆளுகை செய்ய ஒப்புக்கொடுக்கிறாயா...

அன்பின் பிதாவே, தங்களுடைய வாழ்கையில் உம்முடைய ஆளுகையைத் தவிர்த்த இவர்களை நோக்கிப் பாரும். ஒப்புக்கொடுத்த ஒவ்வொருவரும் இன்றிலிருந்து உம்மால் ஆளுகை செய்யப்படட்டும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.

- ***R.சாலமோன்***

## முதலாம் வார ஜெபக்குறிப்புகள்

- சிறு குழந்தைகள் அநேகர் கொரோன தொற்றினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட குழந்தைகளுக்காக ஜெபிப்போம்.
- அதிக உயிரிழப்புகளை சந்தித்து பாதிப்பின் உட்சத்திலுள்ள அமெரிக்க ஐக்கிய தேசத்தில் நோயின் தாக்கம் குறைய ஜெபிப்போம்.
- மிக அதிக பாதிப்பை அடைந்துள்ள மராட்டிய மாநிலத்திற்காய் ஜெபிப்போம்.
- கொள்ளை நோயின் தாக்கம் இன்னும் குறையாத போது வெட்டுகிளிகளின் படையெடுப்பினால் தேசத்தின் உணவு உற்பத்தி வெகுவாக பாதிக்கப்ப்பட வாய்ப்புள்ளது. அப்படிப்பட்ட பாதிப்புகள் ஏதும் ஏற்படாதவாறு கர்த்தர் தேசத்தை காத்துக்கொள்ளும்படியாய் ஜெபிப்போம்.

## இரண்டாம் வார ஜெபக்குறிப்புகள்

- தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அரசு அமல்படுத்தும்படியாய் ஜெபிப்போம்.
- முடக்கப்பட்டிருந்த ஆபாச வலைதளங்கள் இந்த நாட்களிலே மீண்டும் திறக்கப்பட்டத்தின் மூலம் அநேகர் இரகசிய பாவங்களில் சிக்கியுள்ளனர். மீண்டும் ஆபாச வலைதளங்கள் முடக்கப்படவும், இந்த பாவத்தில் இருந்து ஜனங்கள் மீட்கப்படவும் ஜெபிப்போம்.
- விசுவாசிகளுக்குள் ஊற்றப்பட்டுள்ள ஜெப ஆவியை அவித்து போட்டுவிடாதபடி, தொடர்ந்து அனல் மூட்டி எழுப்பப்பட்ட ஜெபிப்போம்.
- சிறு குறுந் தொழில் செய்வோர் மீண்டும் தங்கள் தொழிலை துவங்க தேவையான முதலீட்டிர்க்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## மூன்றாம் வார ஜெபக்குறிப்புகள்

- கொரோனா தாக்கத்தினால் தங்களுக்கு பிரியமானவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களின் ஆறுதலுக்காய் ஜெபிப்போம்.
- மாணவர்களின் கல்வியும், எதிர்காலமும் பாதிக்கப்படாதபடி பள்ளி, கல்லூரிகள் சீக்கிரம் திறக்கப்பட ஜெபிப்போம்.
- வருகிற பருவ காலத்தில் கர்த்தர் நல்ல மழையை வருஷிக்கப்பண்ணி விவசாயத்தில் நல்ல மகசூலை அருளும்படியாய் ஜெபிப்போம்.
- பொருளாதாரத்தை நிலை நிறுத்த தேவையான ஞானத்தை நம் தேசத்தின் பொருளாதார நிபுணர்களுக்கு அருளும்படியாய் ஜெபிப்போம்.

## நான்காம் வார ஜெபக்குறிப்புகள்

- எழுப்புதலின் வாசனையும், வாஞ்சையும் விசுவாசிகளின் உள்ளங்களிலும், தேசத்தின் எல்லைகளிலும் பெருகும்படி ஜெபிப்போம்.
- சுத்திகரிக்கப்பட்டிருக்கிற சபைகள் மீண்டும் தங்கள் பழைய நிலைக்கு ஒருநாளும் திரும்பாதபடி தங்கள் சுத்திகரிப்பில் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.
- ஒவ்வொறு வருடமும் ஜூன் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை சென்னை பட்டணத்தில் ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் திரளாய் இணைந்து ஒரு மாபெரும் பேரணியை நடத்துவார்கள். அதன் மூலம் இந்த பொல்லாத அருவருப்பான பாவம் பொது ஜனங்கள் மத்தியில் எதார்த்தமாக்கப்படுகிறது. அப்படிப்பட்ட பாவத்தில் அடிமைப்பட்டுள்ள ஜனங்கள் உணர்வடையும்படியாய் ஜெபிப்போம்.
- புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பி செல்லும்போது அநேகர் விபத்துகளில் சிக்கி மரிக்கின்றனர். அவர்களுடைய பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

# TRUE SOLDIER

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, *"No Guts No Glory"*. அந்த வார்த்தையினுடைய அர்த்தம், "துணிவு இல்லாதவனுக்கு வெற்றியின் மகுடத்தை சூடும் தகுதி இல்லை" என்று பொருள். உலக வரலாற்றில் மகுடத்தை சூடியவர்கள் எல்லோரும், தங்களுடைய பாதையில் துணிந்ததினால், வரலாற்றில் இடம் பெற்றார்கள். ஒரு இராணுவ வீரன் தனக்கு முன்பாக நிற்கும் எதிரியை பார்க்கும் போது, சற்றும் யோசிக்காமல், துணிவோடு அந்த எதிரியை அழிக்க முற்படுவான். மேலும், அந்த எதிரியை அழிக்கும் போது, தன்னுடைய முடிவில் எந்த ஒரு சலனமும் இல்லாமல் அதை நிறைவேற்றுவான். அதை போலவே,, ஒரு போர்சேவகனுக்கு தேவையான ஆயுதம் "துணிவு". எபேசியர்.*6:11*, ல் சொல்லுகிறபடி, பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி, ஒரு ஆயத்தம் அனுதினமும், உங்கள் எல்லைகளில் காணப்பட வேண்டும். மேலும், இந்த யுத்தத்தில் நிற்கிற நீங்கள், சில வேளைகளில், சில காயங்களையும் ஏற்க வேண்டும். வேதம் சொல்கிறது, *II* தீமோத்தேயு *2:3*, ல் "நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி". என்னது தீங்கு அனுபவிக்க வேண்டுமா?, அது என்ன தீங்கு என்று யோசிக்கிறீர்களா? ஆம், வாலிப தம்பி தங்கச்சி, நீங்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருக்கு உண்மையாக இருக்க தீர்மானித்து, உங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில், ஒரு நல்ல போர்சேவகனாய் ஓட முயலும் போது, போராட்டம் ஆரம்பிக்கும், உபத்திரவம் வரும், பாவம் செய்யும்படிக்கு சிந்தனைகளில் யுத்தம் நடைபெறும். பிசாசு உன் ஓட்டத்தை தீங்கினால் தடுக்க முயலுவான். ஆனால், உன் ஓட்டத்தை தடுக்கவும், உன்னை அழிக்கவும், அவன் எடுக்கிற எல்லா முயற்சிகளையும், ஒரு போர்சேவகனாய் நீ அதை முறியடித்து, நீதியினிமித்தம் தீங்கனுபவிக்க உன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். இதைக் கூறும் பொழுது, சமீபத்தில் கர்த்தர் எனக்கு கொடுத்த, ஒரு தரிசனத்தை, பரிசுத்த ஆவியானவர் ஞாயாபகப்படுத்துகிறார். அந்த தரிசனத்தில், 'எனக்கு முன்பாக ஒரு பந்தய சாலை தெரிகிறது. ஓடுகிறவர்கள் எல்லாரும் ஆயத்தமாக நின்று கொண்டிருக்கிறார்கள். நானும் அவர்கள் நடுவிலே ஓடுவதற்கு ஆயத்தமாக, இராணுவ உடை அணிந்து நின்று கொண்டிருக்கிறேன். போட்டி ஆரம்பிக்கிறது, எல்லோரும் ஓட ஆரம்பிகிறார்கள், நானும் ஓட ஆரம்பிக்கிறேன். ஓடும் பாதையில் அநேக தடைகள் வருகிறது. சில இடங்களில் நான் கீழே விழுகிறேன், உடனே என் அருகில் கர்த்தர் நிற்கிறார். அவர் என்னை தூக்கி, காயம் கட்டி, என்னை தட்டி அனுப்புகிறார். சில இடங்களில் நான் விழும் போது, அவர் என்னை உற்சாகப்படுத்தி "ஓடு மகளே" என்று கூறுகிறார். நானும் என்னுடைய ஓட்டத்தில் ஒரு புதிய உத்வேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறேன். அந்த ஓட்டத்தின் பாதையில் சில வனாந்திரமான வழிகள், அடர்ந்த காடுகள், சில இருளான பாதைகள் வருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக, கர்த்தர் என்னுடன் இருப்பதை மறைத்துக் கொண்டார். அதிகமான இருள் உள்ள ஓர் இடத்தில், நான் சோர்வுற்று, தீங்குக்கு பயந்து, முன்னேற முயலாமல் பின்னிட்டு திரும்பிப் பார்க்கிறேன். பின்பதாக ஒரே இருளாக இருக்கிறது. சில இடங்களில், நான் கீழே விழுந்ததினால், எனக்கு காயங்களும் ஏற்ப்பட்டிருக்கிறது. எங்கு செல்வது என்று, வழி தெரியாமல் நின்று கொண்டிருந்த நான், ஒரு நொடி என் கண்களை மூடினேன். உடனே ஒரு சத்தம் தொனித்தது, "மகளே, விட்டுக்கொடுத்து விடாதே, பாவம், ஆசை, இச்சை, இவைகளை விட்டு ஓடு, கிறிஸ்துவினிமித்தம் வரும் நெருக்கம் அனைத்தையும் உதறி தள்ளி விட்டு ஓடு", என்று சொன்னது. உடனே நான், *"I never give up, I'm going to share in suffering as a good soldier of Christ Jesus"*, என்று சொல்லி ஓட ஆரம்பிக்கிறேன். நான் கண்களை திறந்த பொழுது, வெற்றியின் இலக்கையை கடந்து விட்டேன். அன்று நான், ஒரு நல்ல போர்சேவகனாய் தீங்கனுபவிக்க என்னை ஒப்புக்கொடுத்தேன். இதை வாசிக்கிற அன்பு வாலிப தம்பி/தங்கச்சி, இன்று நீயும் உன்னை ஒப்புக்கொடுத்து, எந்த போராட்டம் வந்தாலும், தீங்கனுபவிக்கவும், தீங்கு செய்கிற பிசாசை எதிர்க்கவும், துணிவுடன் செயல்படு.

"சேனையே ஆயத்தப்படு,
உன்னோடு கூடின கூட்டத்தை ஆயத்தப்படுத்து"

*- Daisy Solomon*

# Romans 2 - The Righteous Judge!

Have you ever wondered about these following thoughts/questions?

1. Would Gentiles (the non-Christians) inherit the kingdom of God?
2. There are good and innocent people in different religions as well. What happens to them?
3. Who is the judge?

Let's get started with the basic understanding of who is our judge and how it will be done. Who is the Judge? God judges through Jesus Christ. Romans 2.16 KJV says, "In the day when God shall judge the secrets of men by Jesus Christ according to my gospel." In John 5:22-23 NIV, Jesus Himself revealed this truth, "Moreover, the Father judges no one, but has entrusted all judgment to the Son, that all may honor the Son just as they honor the Father. Whoever does not honor the Son does not honor the Father, who sent him". It has been manifested in Acts 17.31 NKJV "because He has appointed a day on which He will judge the world in righteousness by the Man whom He has ordained. He has given assurance of this to all by raising Him from the dead." The apostle Paul reiterates this truth in 2 Timothy 4:1 ("the Lord Jesus Christ, who will judge the living and the dead"). When the Son of Man comes in His glory, He will sit on His glorious throne and separate them from one another, as the shepherd separates the sheep from the goats (Matthew 25-31-32).

How would Jesus judge people? Yes, Certainly He will judge people righteously (Acts 17.31,).

Be prepared and worry not on judgment day. Jesus Christ was in the flesh and He understands this human race's emotions and temptations. He shed His own blood on the cross for us! Indisputably, He will be the fair and best judge of the mankind.

What is it for non-Christians? We know for sure that Jesus is the ONLY way to inherit God's kingdom (John 14.6) and His blood saves us from all the iniquities and sins (1 John 1:7). Jesus' sacrifice on the cross is way bigger than what we could grasp and understand. No one comes to the Father except through Jesus Christ (John 14:6). If you and I have so much consideration about the souls of non-Christians, how much more will God consider these people for whom Jesus sacrificed His life (Isaiah 53:5)! His ways are higher than our ways (Isaiah 55:9). God has given conscience to the Gentiles and the law is written in their hearts. The bible says in Roman 2: 14-15, "Indeed, when Gentiles, who do not have the law, do by nature things required by the law, they are a law for themselves, even though they do not have the law. They show that the requirements of the law are written on their hearts, their consciences also bearing witness, and their thoughts sometimes accusing them and at other times even defending them." Our wisdom is too small to understand His majestic and tremendous plans about judgment (Romans 11:33–34). Jesus Christ is a righteous Judge. We need not to conclude or speculate anything which is not revealed to us in the light of the Bible. We shall wait to uncover this mystery on that day (Romans 2.16)!

What are we supposed to do about that? Are you a person whose heart is longing to witness a

great revival in Tamil Nadu and in India? Then, first it should start with you! How often you shared the Gospel of Christ with your non-Christian friends and colleagues? Think about it. The Lord is not slack concerning his promise, as some men count slackness; but is longsuffering to us-ward, not willing that any should perish, but that all should come to repentance (2 peter 3:9). In fact, it is a good thought about these non-Christian which urges you and I to fulfill one of the greatest commandments of Jesus Christ which is beautifully outlined in Matthew 28: 18-20 – "Then Jesus came to them and said, "All authority in heaven and on earth has been given to me. Therefore go and make disciples of all nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, and teaching them to obey everything I have commanded you. And surely I am with you always, to the very end of the age." It's not the work of your pastor, or evangelist! It's our job-the job of any Christian! We are responsible for our non-Christian friends. Do not be ashamed of the Gospel of Jesus Christ (Romans 1.16).

How often do we take the place of God and judge others rather than bring them into the light (Romans 2.1)! I am not diving deep into this topic at this time. But, take a minute to think about it!

How shall we escape from it? Do God's will (Matthew 7.21), Seek the kingdom of God (Matthew 6:33), Be mindful about your salvation everyday (Hebrews 2:3), Watch and pray always (Luke 21.36), Do Godly and good things (Romans 2:6-7), Depart from evil (Psalm 37:27-28), Keep your heart pure (Matthew 5:8), Abide in God (John 15:5-8), Set your minds on Heavenly things (Colossians 3:1-2), Follow after righteousness, godliness, faith, love, patience, meekness (1 Timothy 6:11), and Present yourselves without spot and blameless before God (2 peter 3.14).

When would this (His second coming) take place? So that we will be prepared on that time! -This is a very interesting question. Isn't that right? Matthew 24:36 NKJV - "But of that day and hour no one knows, not even the angels of heaven, but My Father only." Acts 1.7 – "And He said to them, "It is not for you to know times or seasons which the Father has put in His own authority."

Nobody knows when it is going to happen, but it is our primary duty to be prepared to meet Him at any moment!

I encourage you to join me with this small prayer, "Loving Heavenly father, who is Holy! In this moment, we worship You and thank You for giving us Your understanding and opportunity that You have given through our Lord and Saviour Jesus Christ. We're surrendering our lives. Help us to bring a revival in and through us. Keep us holy until we see our Lord and Saviour face to face. Let Your will be done in our lives. We pray all these things in the Name of Jesus. Amen!"

Here is your promising and comforting verse:

Jesus says "Most assuredly, I say to you, he who hears My word and believes in Him who sent Me has everlasting life, and shall not come into judgment, but has passed from death into life." - John 5:24

BE PREPARED TO MEET HIM - God bless you!

- Manoj Kumar

# கோதுமை மணிகள்

## கத்தார் சிங்

தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்ட சேனையே !!!
இந்த பகுதியின் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.
எனக்கு இருப்பது ஒரே ஒரு இதயம்! அதையும் என் இயேசுவுக்கு கொடுத்து விட்டேன் ! என்று தன்னை நேசிப்பதாக கூறிய ஒரு வாலிப மகளுக்கு பதிலளித்தான் ஒருவன். யார் அந்த வாலிபன் ?
இன்று அவனை குறித்து தான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். ஒருவேளை இந்த மகனை குறித்து அநேகர் அறிந்திருக்கலாம். எனினும், இவனுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சில காரியங்களை நான் உங்களுக்கு முன்பதாக வைக்க ஆசைப்படுகிறேன். சீக்கியராகிய இவர் பெயர் கத்தார் சிங். சாது சுந்தர் சிங் என்ற தேவ மனிதனின் காலத்தில் வாழ்ந்தவர். பணக்கார ஜமீன்தார் குடும்பத்தின், கடைசி மகனாகவும், அவர்களுடைய தெய்வீக வழிபாடுகளிலும், கல்வியறிவிலும் மிகவும் தேறினவனாகவும், செல்வ செழிப்போடும் வளர்க்கப்பட்டார்.
நாளடைவில், அவருக்கு ஆன்மீக விஷயத்தில் நாட்டம் அதிகரித்தது. அவருடைய மத கொள்கைகள் சார்ந்த பல கருத்துக்கள், காரியங்களைக் கற்றும், அவருடைய இருதயத்தில் ஏனோ சமாதானமும், திருப்தியும் காணப்பட வில்லை. ஒரு முறை இயேசு கிறிஸ்துவை குறித்து அவருக்கு சொல்லப்பட்டது. தேவனின் அன்பு அவரை மிகவும் கவர்ந்து இழுத்தது. அதிகமாக வேதத்தைக் கற்றுக்கொள்ள தொடங்கினார். சீக்கிரத்தில் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தவும், இயேசுவைக் குறித்து அநேகருக்கு பிரசங்கிக்கவும் ஆரம்பித்தார். இவரின் வைராக்கியத்தை கண்டு, எங்கு தன் மதத்தை விட்டு வேறு மதத்தில் போய்விடுவானோ என்று அவருடைய பெற்றோர்கள் பயந்தனர். அவரை கடிந்து கொள்ள தொடங்கினர். ஆனாலும், அவரால் கிறிஸ்துவின் அன்பை விட முடியவில்லை.
ஒரு முறை அவனுடைய பெற்றோர் ஒரு வாலிபப் பெண்ணை அழைத்து கத்தார் சிங்கிடம் போய் அவனை எப்படியாகிலும் அவளுடைய ஆசை வார்த்தைகளால் பேசி மாற்றிவிடும் படி அனுப்பினர். ஆனால், கத்தார் சிங்கோ எனக்கு இருப்பது ஒரே இதயம் அதையும் என்றோ என் இயேசுவுக்கு கொடுத்து விட்டேன் என்றார். அவருடைய பதிலை கேட்ட அந்த பெண் ஏமாற்றத்தோடு திரும்பினாள். எத்தனையோ வார்த்தைகள், எத்தனையோ திட்டங்கள், எத்தனையோ எதிர்ப்புகள்..... ஆனாலும், கத்தார் சிங்கை மனம் மாற்ற முடியாமல் கோபமைடந்த அவருடைய குடும்பத்தினர் அவரை வீட்டை விட்டு வெளியே துரத்தினர்.
அநேக பாடுகள், பசி என ஒரு கடினமான பாதையின் வழியாக அவருடைய வாழ்க்கை நகர ஆரம்பித்தது. எனினும், அவர் கிறிஸ்துவை பற்றி சொல்வதை நிறுத்தவில்லை. பல எதிர்ப்புகளைத் தாண்டி பஞ்சாப் மாநிலத்தில் பல கிராமங்கள் தெருக்கள் என எல்லா இடங்களிலும் இயேசுவைக் குறித்து பிரசங்கித்தார். பின்பு, புத்த மதத்தினர் நிறைந்த திபத்திற்கு சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்தார். அங்கேயும் அநேக எதிர்ப்புகளை

சந்தித்தார். அநேகர் அவருடைய வார்த்தையை கேட்க ஆரம்பித்தனர். கர்த்தருக்காக எதையும் இழக்கும் அளவு பெலனடைந்தார். அவரை கர்த்தரே ஆளுகை செய்தார்.

ஊழிய பாதையில் நாட்கள் உருண்டோடின. அவர் மேல் கோபங்கொண்ட தலைவர்கள், வெளிநாட்டு மதத்தை சட்டவிரோதமாக கொண்டு வருகிறார் என்று குற்றம் சாட்டினர். அவருக்கு எதிராக அநேக திட்டங்கள் செயல்பட ஆரம்பித்தது. அவரின் முடிவு சமீபத்தில் வந்தது என்று தன் மனதில் நினைத்துக் கொண்டு, கடைசி நேரத்திலும் கிறிஸ்துவின் அன்பை அங்கு இருந்த ஜனங்களுக்கு எடுத்துரைத்தார். அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

தன் இறுதி நாளுக்குள் வந்தார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவருடைய உடைகளை களைந்து ஈரமான காட்டெருமை தோலினால் முற்றிலுமாக மூடி, கொளுத்தும் வெயிலில் அவரை தூக்கி எறிந்தனர். வெயிலின் தாக்கம் அவருடைய சரீரத்தை மிகவும் வேதனை படுத்தியது. வெயில் படும் போது அவர் மேல் மூடப்பட்ட அந்த எருமையின் தோல் சுருங்கி, எலும்புகள் எல்லாம் நொறுங்கும் சத்தம் வெளியிலே அதிகமாக கேட்டது. அவரை சுற்றியுள்ள ஜனங்கள் அதை சிரித்துக் கொண்டே ரசித்தனர். வேதனையின் உச்சத்தை அடைந்தார். மூன்று நாட்கள் அந்த வேதனையை அநுபவித்தார். அவர் அருகில் புதிய ஏற்பாடு ஒன்று வைக்கப்பட்டது. தன் கடைசி நேரத்தில் அந்த வேதத்தில் அவருடைய கடைசி வார்த்தைகளை எழுதினார். "ஒரு முறை அல்ல பல லட்சம் முறை அவரிடம் வேண்டிக்கொள்கிறேன், அவரை அதிகமாக நேசிக்கிறேன். எப்படி ஒரு மனைவி தன் கணவன் இறக்கும் போது அவளுடைய அன்பை அவனுடைய உயிரில் வைக்கிறாளோ அவ்வாறே நானும் துடிக்கிறேன். அவர் எனக்கு கொடுத்த வாழ்க்கையை அவருக்காக கொடுக்கிறேன். என்னால் முடிந்ததை நானும் அவருக்காக செய்கிறேன்" என்று எழுதினார். இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று உரத்த சத்தத்தோடு கூறி தன் ஜீவனை விட்டார்.

இதை வாசிக்கிற சேனையே ! இந்த சுந்தர் சிங்கின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை குறித்து பார்த்தோமே அவரைப் போல நாம் இருக்கிறோமா ? அவருடைய வாலிப நாட்களில், தன் ஒரே இதயத்தை கர்த்தரின் ஆளுகைக்கு விட்டு கொடுத்தாரே, அவரை மட்டுமே உண்மையாய் நேசித்தாரே, நாம் நம்முடைய இருதயத்தை யாருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோம் ?, யாரை அதிகமாய் நேசிக்கிறோம் ? என்பதை சிந்திக்க வேண்டும். தனக்காக ஜீவனைக் கொடுத்த இயேசுவையே நேசித்து, அவரையே சார்ந்து கொண்டு, தன் மரண பரியந்தம் உண்மையாக வாழ்ந்தாரே.... இன்று அவரை போலவே வாழ்வதற்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்ட நாமும் நம்மை ஒப்புக்கொடுப்போமா ? தன் இருதயத்தை எல்லா தீங்குக்கும் விலக்கிக் காத்து, நம்முடைய இளமையைக் குறித்து ஒருவனும் அசட்டை பண்ணாத படிக்கு வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், கற்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும் மாதிரியாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இன்றே நம்மை அர்ப்பணிப்போம் ! அவரே நம்மை ஆளுகை செய்வார்.

*-Priy...*

# Kite கே control ஆ ?

தம்பி தங்கச்சி நீங்க என்றாவது உங்க life ல என்றாவது பட்டம்விட்டிருக்கீங்களா ? .... பட்டம் வானத்துல பறக்க அழகா தான் இருக்கும், ஆனால் அதை control(ஆளுமை ) பண்ண ஒரு controller (ஆளுநர்) இல்லனா அதனால பறக்க முடியாது.... Kite க்கு life ல happiness ஏ வானத்துல உயர உயர பறந்து திரிந்து, காட்சிகொடுக்கிறதுதான்....

kite தன் life ல happy ஆ இருக்க, kite ஆ control(ஆளுமை) பண்ண ஒரு controller வேணும்.... ஒரு வேலை kite cooperate பண்ணல ன controller என்ன try பண்ணினாலும் workout ஆகாது.... நமக்கும் life ல happy ஆ வாழனும் னு ஆசையா இருக்கு ல ? Kite எப்படி வாழும் தெரியுமா ? உயர உயர பறந்து அநேகருக்கு காட்சி கொடுத்து, சிலர சிரிக்க வச்சு, சிலர ரசிக்க வச்சு, முக்கியமா controller க்கு விட்டுக்கொடுத்து அடங்கி வாழும்.... நம்மலும் ஏதாவது ஒரு ஓரத்தில யாருக்காச்சும் useful ஆ இருக்கணும் னு தோணுதா ? Kite ஆகிய நம்ம controller ஆகிய Jesus கிட்ட நம்மல கொடுக்கும் போது நம்ம controller Jesus நம்மல பார்க்காத உயரத்துக்கும் போகாத தூரத்திற்கும் (1crore) கொண்டு போய் நம்மல பயன்படுத்துவாங்க .... kite எப்படி தன்னோட life journey ah தன் controller கூட மட்டும் வாழுதோ அதே போல நம்மலும் நம்மை ஆளுமை செய்கிற இயேசு இராஜா கூட நம்ம journey அ start பண்ணுவோமா ???

**-Blessy**

# வெண் புறா



உன் கூண்டைத்
தன் கூடாக்க
உன்னையே தேடி வந்த
ஒரே வெண்புறா

-Nelson

Reg.No. 4/46/2019
Regd.Office :428,7th Middle Street,Thiagarajanagar, Tirunelveli - 627011
Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org